சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அ.வ.எண்.26/2023

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரங்கம்மாள் | வயது | 53 |
| க/பெ | துரைசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | தாசனூர் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | கட்டிட வேலை |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தற்போது நான் குடியிருக்கும் வீடு எந்த புல எண்னில் எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்றால் ¾ செண்ட் இருக்கும். அந்த வீடும் இடிந்து விழுவது போல் உள்ளது. நான் குடியிருக்கும் வீடு எனது கணவருடைய அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரி தான். எனது மாமியார் உயிருடன் இருந்த போதே அந்த வீட்டை எனது கணவருக்கு செட்டில் மெண்ட் எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரி தான். தாவா வீட்டை கட்டுவதற்கு முன்னர் எனது மாமியார் எனது கணவருக்கு எழுதி கொடுத்த வீட்டில் தான் நாங்கள் குடியிருந்தோம் என்றால் சரி தான். தாவா சொத்து எனது கணவர் சுயமாக உழைத்து சம்பாதித்த சொத்து என்றால் சரி அல்ல. எனது அம்மா வாங்கி கொடுத்த சொத்து ஆகும். எனது அம்மா தான் வாங்கி கொடுத்தார் என்று காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. எனது அம்மா வீட்டை வாங்கி கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல.

எனது தந்தை அரசு ஊழியராக இருந்து ஓய்வு பெற்று அந்த பணத்தை எனது அம்மாவிடம் கொடுத்து அதை வைத்து தான் தாவா வீடு வாங்கப்பட்டது என்று காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டை எனது கணவர் எந்த வருடம் கட்ட ஆரம்பித்தார் என்றால் தெரியவில்லை. எனது மகளான 2 ஆம் வாதிக்கு திருமணம் ஆன பின்னர் தான் எனது கணவர் தாவா சொத்தில் வீடு கட்ட ஆரம்பித்தார் என்றால் அதற்கு முன்னரே கட்ட ஆரம்பித்து விட்டார். 2 ஆம் வாதி எனது கணவரின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொண்டதால் குடும்பத்திற்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவ்வாறு பிரச்சனை ஏற்பட்டு அவரை நாங்கள் வெளியில் போக சொன்னதால் தான் எனது கணவர் நாங்கள் குடியிருந்த வீட்டில் இருந்து வெளியேறி தாவா வீட்டில் குடியேறினார் என்றால் சரி அல்ல. தாவா வீட்டில் எனது கணவர் குடியிருந்த காலத்தில் நான், எனது மகன் மற்றும் மகள் ஆகியோர்கள் தற்போதும் நான் குடியிருக்கும் வீட்டில் குடியிருந்தோம் என்றால் சரி தான். அந்த சமயத்தில் கொஞ்ச நாட்கள் கழித்து பிரதிவாதியும், எனது கணவருடன் சேர்ந்து குடியிருக்க சென்று விட்டார் என்றால் சரி தான். எனது மாமியார் எனது கணவருக்கு எழுதி கொடுத்த வீட்டில் நானும், 2 ஆம் வாதியும் குடியிருந்தோம் என்றால் சரி தான். அப்போது தாவா சொத்தில் பிரதிவாதியும் எனது கணவரும் குடியிருந்தார்கள் என்றால் சரி தான். எனது மகளால் ஏற்பட்ட பிரச்சனையால் தான் எனது மகனும் எனது கணவருடன் சென்று விட்டார் என்றால் சரி அல்ல. என்ன காரணத்திற்காக எனது மகன் வீட்டை விட்டு வெளியேறினார் என்றால் எனது மகன், மகளை

அடித்ததால் தான் நான் வீட்டை விட்டு வெளியேற சொன்னேன். அவரும் வெளியேறி விட்டார். எனது மகள் 2 வதாக திருமணம் செய்து கொண்டதால் அவருக்கும் எனது மகனுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. அந்த சமயத்தில் எனது மகள் 2 வதாக திருமணம் செய்த பின்னரும் அந்த கணவருடன் வாழாமல் என் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரி தான். எனது மகனின் அறிவுரையை எனது மகள் கேட்காததால் பிரச்சனை ஏற்பட்டு எனது மகனை நாங்கள் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டோம் என்றால் சரி அல்ல. அவ்வாறு எனது மகன் சென்ற சமயத்தில் தாவா வீட்டில் குடியேறினார் என்றும் அப்போது அந்த வீட்டில் 2 அறைகள் இருந்தன என்றால் சரி தான். அந்த 2 அறைகளுக்கும் எனது கணவர் 2 மின் இணைப்புகள் வாங்கி இருந்தார் என்றால் சரி தான். அந்த சமயத்தில் எங்களுக்கும் எனது கணவர் மற்றும் மகனுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரி அல்ல. பிரதிவாதியின் திருமணத்தில் நானும் எனது மகளும் கலந்து கொள்ள வில்லை என்றால் சரி தான். எனது மகன் வீட்டை விட்டு ஓடி காதல் திருமணம் செய்து கொண்டார். அந்த சமயத்தில் எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரி அல்ல. அந்த திருமணத்திற்கு என்னை மதித்து அழைக்கவில்லை. எனது மகனின் மாமியார் ரோட்டில் வைத்து அழைத்தார். எனது மகள் தவறான முறையில் செல்லக் கூடாது என எனது மகன் கண்டித்தால் தான் நான் பிரதிவாதியை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன் என்றும் நாங்கள் தான் அவருடன் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தோம் என்றால் சரி அல்ல. எனது மகனும் எனது கணவரும் முறையாக என்னை அழைத்தும் அவர் காதல் திருமணம் செய்ததால் தான் நான் அந்த திருமணத்திற்கு போகவில்லை என்றால்

சரி அல்ல. வழக்கிற்காக என்னை முறையாக அழைக்காததால் திருமணத்திற்கு செல்லவில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்.
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.